இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 23-05-2023

துள்ளும் காளைகள்

ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கு தடை இல்லை என்று அறிவித்துவிட்டது உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு. தமிழ்நாடு அரசின் சட்டத் திருத்தம் செல்லும் என்று நீதிபதிகள் அமர்வு ஒட்டுமொத்தமாக ஒரே மாதிரியான தீர்ப்பை வழங்கி விட்டார்கள். தமிழ்நாடு அரசின் சட்டப் போராட்டத்துக்கு கிடைத்த மகத்தான வெற்றி இது.

பழந்தமிழ் இலக்கியங்களில் ஏறுதழுவல் நிகழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன. காளையைத் தழுவிப் போரிட்டு அடக்குவதால் 'கொல்லேறு தழுவுதல்' என்று வருகிறது. சிந்துவெளி நாகரிகம் சார்ந்த முத்திரை ஒன்றில் ஒரு காளை உருவமும் அதை அடக்க முயலும் வீரரை அக்காளை தூக்கி எறிவதும் உள்ளது.

சங்க இலக்கியமான கலித்தொகையில்,

கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்.

அஞ்சார் கொலை ஏறு கொள்பவர் அல்லாத நெஞ்சிலார் தோய்ப்பதற்கு அரிய - உயிர்துறந்து நைவாரா ஆய மகள் தோள் - என்றுரைக்கிறது.

அடக்கப்பட்ட மற்றும் அடக்கப்படாத காளைகள் தொழுவத்தைக் கடந்து வயல்வெளிகளுக்கு ஓடிவிட்ட பின்னர் காளைகளும் ஆயர்குல மகளிரும் ஆட்டம் ஆடும்போது இறைவனையும் அரசனையும் வாழ்த்துகின்றனர். பண்டைக் காலத்தில் ஐந்திணை நிலங்களுள் ஒன்றாகிய முல்லை நிலத்தின் மக்களிடம் இவ்வேறு தழுவுதல் நடைபெற்று வந்தது.

சல்லி என்பது விழாவின் போது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகிற வளையத்தினைக் குறிக்கும். புளியங் கம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணியும் வழக்கம் தற்போதும் வழக்கத்தில் உள்ளது. முன்பு புழக்கத்தில் இருந்த 'சல்லிக் காசு' என்னும் நாணயங்களைத் துணியில் வைத்து மாட்டின் கொம்புகளில் கட்டிவிடும் பழக்கம் இருந்தது. மாட்டை அணையும் வீரருக்கு அந்தப் பணமுடிப்பு சொந்தமாகும். இந்தப் பழக்கம் பிற்காலத்தில் 'சல்லிக் கட்டு' என ஆனது. இதே போன்ற விளையாட்டுகள் மற்ற சில மாநிலங்களிலும் இருக்கிறது.

தமிழ்நாட்டில் இருக்கும் சல்லிக்கட்டு, கர்நாடகாவில் இருக்கும் கம்பாலா, மகாராஷ்டிராவில் இருக்கும் ரேக்ளா ஆகிய போட்டிகளை நடத்த தடைவிதிக்கக் கோரி பீட்டா உள்ளிட்ட அமைப்புகள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்கள். இதனை ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு விசாரித்து வந்தது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் தேதி முதல் உச்சநீதிமன்ற நீதிபதிகள் அமர்வு தனது விசாரணையைத் தொடங்கியது.

"ஜல்லிக்கட்டு வெறும் பொழுதுபோக்கு போட்டி அல்ல, அது விவசாயிகளின் வாழ்வோடும், கலாச்சாரத்தோடும் கலந்தது. ஜல்லிக்கட்டு போட்டிகள் சட்டப்படிதான் நடக்கிறது. அதற்கான அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளையும் அரசுதான் செய்து தருகிறது. விலங்குகளை அதிகமாக மதிக்கிறோம். இப்போட்டியில் கலந்து கொள்ளும் விலங்குகள் ஆண்டு தோறும் அக்குடும்பங்களால் முறையாக, மிகுந்த கவனத்தோடு வளர்க்கப்படுகின்றன. போட்டி முடிந்ததும் அதே ஈடுபாட்டுடன் வளர்க்கப்படுகின்றன" என்றும் தமிழ்நாடு அரசு அழுத்தம் திருத்தமான வாதங்களை வைத்தது.

இதனை முழுமையாக ஏற்றுக் கொண்டு விட்டது உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு. **"ஜல்லிக்கட்டை அனுமதிக்கும் தமிழ்நாடு அரசின் திருத்தச் சட்டம் உள்நோக்கத்துடன் இயற்றப்பட்டது அல்ல. இது போன்ற சட்டங்களை இயற்ற மாநில சட்டசபைக்கு அதிகாரம் உள்ளது. தமிழர் பண்பாட்டின் அங்கமாக ஜல்லிக்கட்டு இருந்து வருகிறது என்று சட்டசபை தீர்மானித்து சட்டம் இயற்றி விட்டதால் சட்டசபையின் நோக்கத்தை இந்த நீதிமன்றம் இடையூறு செய்யப் போவதில்லை. விலங்கு வதையைக் குறைத்து பண்பாட்டு விளையாட்டாக இது தொடர்வதால் அதற்கு தடை விதிக்கத் தேவையில்லை. இந்தத் தீர்ப்பு கர்நாடகாவில் நடைபெறும் கம்பாலா, மராட்டியத்தில் நடைபெறும் ரேக்ளா ஆகிய போட்டிகளுக்கும் பொருந்தும்"** என்று நீதிபதிகள் உறுதிபட தீர்ப்பளித்துவிட்டார்கள். எனவேதான் 'தமிழ்நாட்டு வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கத்தக்க தீர்ப்பு' என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஜல்லிக்கட்டுப் போட்டிகளைத் தடை செய்வதற்கு எதிராக 2006 ஆம் ஆண்டு முதலே தி.மு.க. அரசு போராடி வருகிறது. ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கு தடை விதிக்க வேண்டும் என்று 2006 ஆம் ஆண்டு மதுரை உயர்நீதிமன்றக் கிளை உத்தரவிட்டது. அப்போது தி.மு.க. அரசு, அதற்கு எதிராக கடுமையான வாதங்களை வைத்தது. நிபந்தனைகளுடன் போட்டியை நடத்திக் கொள்ளலாம் என்று உச்சநீதிமன்றத்தில் தீர்ப்பினைப் பெற்றது (2007) கழக அரசு. சட்டசபையில் 2009 ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டு ஒழுங்குமுறைச் சட்டத்தை கழக அரசு நிறைவேற்றியது. இதனை ஏற்று இப்போட்டிகளை நடத்த உச்சநீதிமன்றம் 2009 ஆம் ஆண்டு அனுமதி வழங்கியது. 2011 ஆம் ஆண்டும் போட்டிகளை நடத்த கழக அரசு அனுமதி பெற்றுத் தந்தது.

விலங்குகளை மையமாக வைத்து நடைபெறும் போட்டிகளுக்கு மொத்தமாக தடை விதிக்க மீண்டும் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதில் இருந்து சிக்கல் எழுந்தது. 2014 ஆம் ஆண்டு மே 7 ஆம் நாள் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஜல்லிக்கட்டுக்கு நிரந்தரத் தடை விதித்து உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சரியாக வாதங்களை வைக்காத காரணத்தால் தமிழ்நாடு அரசின் சீராய்வு மனுவை உச்சநீதிமன்றம் 2015 ஆம் ஆண்டு தள்ளுபடி செய்துவிட்டது. இந்தத் தடை தொடரும் என்று 2017 ஆம் ஆண்டு சனவரியில் உச்சநீதிமன்றம் உறுதி செய்தது. இதுவும் அ.தி.மு.க. ஆட்சிக் காலம் ஆகும்.

அப்போதுதான் சென்னை கடற்கரையில் தமிழர் கூட்டம் திரண்டு போராடியது. அமைதி வழியில் போராடியவர்கள் மீது வன்முறையை ஏவி கூட்டத்தைக் கலைத்தது அ.தி.மு.க. ஆட்சி. இவர்களே ஆட்டோக்களுக்கு தீ வைத்த காட்சி அப்போது ஊடகங்களில் வெளியானது. "I am rather surprised to see. Because, my intelligence officers informed me that there is a picture of a policeman indulging in some kind of violence. It is just ridiculous. We will find out who did this and the motive for that", என்று அ.தி.மு.க. ஆட்சியில் போலீஸ் கமிஷனராக இருந்தவர் பேட்டி கொடுத்தார். போலீஸ்காரர்களை வைத்தே வன்முறை செய்தது அ.தி.மு.க. ஆட்சி.

ஆனால் தமிழ்நாடு முழுவதும் போராட்டம் பரவியது. வெளி மாநிலங்களிலும், தமிழர் வாழும் நாடுகளிலும் போராட்டம் சூழ்ந்தது. இந்த நிலையில்தான் 2017 ஆம் ஆண்டு விலங்குகள் வதை தடுப்பு (தமிழ்நாடு திருத்தம்) சட்டத்தைக் கொண்டு வந்தது அ.தி.மு.க. அரசு. இந்தச் சட்டத்துக்கு உறுதியான வாதங்களை வைத்து வாதாடியது கழக அரசு. சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி சொன்னது மாதிரி, **"சமீபகாலமாக உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஒருமித்த தீர்ப்புகள் அளிக்காமல் ஒரிருவர் மாறுபட்ட தீர்ப்பையே அளித்து வந்தார்கள். இந்த வழக்கில்தான் ஐந்து நீதிபதிகளும் ஒருமித்த தீர்ப்பு தந்தார்கள்" என்பதே மகிழ்ச்சிக்குரியது ஆகும்.**

இனி காளைகள் துள்ளும். தமிழர் தம் பண்பாடு வெல்லும்!

●●

தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை, மே 23 - தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 23.05.2023 முதல் 25.05.2023 வரை: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னையை பொறுத்தவரை அடுத்த இரு தினங்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை தாம்பரத்தில் திராவிடர் கழகத் தொழிலாளரணி மாநில மாநாடு – கருத்தரங்கம் – திறந்தவெளி மாநாடு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டினை கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார். இதில் அமைச்சர் சி.வி.கணேசன், மு.சண்முகம் எம்.பி., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. உள்ளிட்ட திராவிடர் கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் பங்கேற்றனர்.

2000 ரூபாய் நோட்டுகளைத் திரும்பப் பெறும் அறிவிப்பு:

மோடி அரசின் பொருளாதாரச் சீர்குலைவு நடவடிக்கையின் உச்சகட்டம்!

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கண்டனம்!

சென்னை, மே 23 - விடுதலை சிறுத்தைகள் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: -

2000 ரூபாய் நோட்டுகள் திரும்பப் பெறப்படுவதாகவும், செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள் அவற்றை மாற்றிக் கொள்ளலாம் என்றும் மோடி அரசு அறிவித்திருக்கிறது. அதுவரை அவற்றைக் கொடுத்துப் பொருட்களை வாங்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு மோடி அரசின் பொருளாதார சீர்குலைவு நடவடிக்கையின் உச்சகட்டமாகும்.

2016 இல் பண மதிப்பு இழப்பு என்ற பெயரில் ஆயிரம் ரூபாய், ஐநூறு ரூபாய் நோட்டுகள் செல்லாது என மோடி அரசு அறிவித்தது. தங்களிடமிருக்கும் ரூபாய் நோட்டுகளை வங்கிகளில் மாற்றிக்கொள்ளலாம் என அறிவித்தது. அப்படி மாற்றுவதற்காக வங்கிகளின் முன்னால் கோடிக் கணக்கான மக்கள் கால் கடுக்க நின்றனர். வரிசையில் நிற்கும்போதே பலர் உயிரிழந்தனர். 2016 டிசம்பரில் திரிணாமூல் காங்கிரஸ் கட்சியின் எம்.பி டெரக் ஒப்ரியன் வெளியிட்ட புள்ளிவிவரம் 105 பேர் அப்படி வங்கிகளின் முன்னால் வரிசையில் காத்திருக்கும்போதும், அதிர்ச்சியிலும் இறந்தனர் எனக் கூறியது. இப்போதும் அதே போன்று உயிர்களைக் காவு வாங்குவதற்காகத்தான் இந்த அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

தற்போது 3.62 லட்சம் கோடி மதிப்பு கொண்ட 2000 ரூபாய் நோட்டுகள் புழக்கத்தில் இருக்கின்றன என்று ரிசர்வ் வங்கி கூறி இருக்கிறது. ஒருவர் ஒரு நேரத்தில் பத்து நோட்டுகளை மட்டுமே வங்கியில் செலுத்தி மாற்றிக்கொள்ள முடியும் என அரசு அறிவித்திருப்பதால் ஒருவர் ஒரு இலட்சம் ரூபாய்க்கான இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகளை வைத்திருந்தால்கூட 5 முறை அவர் வங்கிக்குச் சென்று மாற்ற வேண்டும். இப்போதும் கூட பெரும்பாலும் பணத்தின் அடிப்படையிலேயே வணிகம் செய்யும் சிறு வணிகர்களை இது மிகப் பெரிய அளவில் பாதிக்கும் எனக் கூறப்படுகிறது. அது மட்டுமின்றி நாடு முழுவதும் உள்ள ஏ.டி.எம்களில் 2000 ரூபாய் நோட்டுக்கென செய்யப்பட்ட மாற்றங்கள் இப்போது வீணாகியுள்ளன. இதனால் பல நூறு கோடி ரூபாய் விரயமாகியுள்ளது.

இந்த அறிவிப்பின் பின்னால் பொருளாதார நோக்கத்தைவிட அரசியல் நோக்கமே அதிகம் உள்ளதெனத் தெரிகிறது. 2016 இல் உத்தரப்பிரதேசத் தேர்தலுக்கு முன்பு 500,1000 ரூபாய் நோட்டுகள் செல்லாமல் ஆக்கப்பட்டன. இப்போது பல மாநிலங்களில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வந்துள்ளது. பண மதிப்பிழப்பு அறிவிக்கப்பட்ட ஐந்தே நாட்களில் குஜராத் மாநிலத்தில் பா.ஜ.க.வுடன் தொடர்புள்ள 11 கூட்டுறவு வங்கிகளில் 3118 கோடி ரூபாய் டெபாசிட் செய்யப்பட்டதை அப்போதே காங்கிரஸ் கட்சி ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்தியது. முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள், அதனால் இதை 'சட்டபூர்வமான கொள்ளை' என விமர்சித்தார். இப்போதும் அப்படித்தான் நடக்கப்போகிறதா? என்ற சந்தேகம் மக்களிடம் எழுந்துள்ளது.

ஏற்கனவே விலைவாசி உயர்வு, பண வீக்கம் ஆகியவற்றால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்த பாதிப்பை இந்த அறிவிப்பு அதிகப்படுத்தவே செய்யும்.

இந்த முன்யோசனையற்ற அறிவிப்பை உடனே திரும்பப் பெறவேண்டும் என வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின் சக்தி நிலையம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, மே 23- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (21.5.2023) வடபழனி வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின் உற்பத்தி நிலையத்தை (Solar Power Plant) தொடங்கி வைத்தார். இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது:-

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, இந்து சமய அறநிலையத்துறையில் காலச் சூழ்நிலைகளுக்கேற்ப, விஞ்ஞான தொழில் நுட்பத்தோடு பல்வேறு முனைப்பான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது, அந்த வகையில் இரு நாட்களுக்கு முன்பு 48 திருக்கோவில்களின் பிரசாதங்கள் அஞ்சல் வழியாக இந்தியா முழுவதும் அனுப்புகின்ற திட்டத்தையும் 50 பிரசித்திப் பெற்ற திருக்கோயில்களின் தகவல்கள் மற்றும் சேவைகளை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையிலும், தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்ய பிரபந்தம், திருமுறைகள் உள்ளிட்டவற்றை ஒலி வடிவில் கேட்டு மகிழ்வடையும் வகையிலும் திருக்கோயில் என்னும் கைபேசி செயலி தொடங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இன்றைக்கு சிட்டி யூனியன் வங்கியின் சமூக பொறுப்பு நிதியிலிருந்து வடபழனி ஆண்டவர் திருக்கோயிலுக்கு ரூபாய் 25 லட்சம் செலவில் சூரிய மின் சக்தி நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த சூரிய மின் சக்தி நிலையமானது திருக்கோயில் முழுமைக்கும் சூரிய மின் ஒளியிலிருந்து பெறப்படுகின்ற மின்சாரத்தின் வாயிலாக மின்சக்தியை நிறைவு செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு திருக்கோயில்களில் சூரிய மின்சக்தி கட்டமைப்பு நிறுவப்பட்டிருந்தாலும் குறிப்பிட்ட சிறு சிறு பணிகளுக்கு தான் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. திருக்கோயில் முழுமைக்கும் சூரிய மின் சக்தி நிறுவப்பட்டு இருக்கின்ற முதல் திருக்கோயில் என்ற பெருமையை வடபழனி ஆண்டவர் திருக்கோயில் பெற்றிருக்கின்றது. இதற்காக முழு முயற்சி எடுத்திட்ட அனைவருக்கும் துறையின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த திருக்கோயில் முழுமைக்கும் சூரிய மின்சக்தி பயன்படுத்துவதால் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்சாரத்தை தடை செய்யவில்லை. திருக்கோயில் நடை சாத்தப்பட்டிருக்கும் வேளையில் உற்பத்தியாகும் சூரிய மின் சக்தி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கப்படுவதன் மூலம் கணிசமான தொகை நம்முடைய திருக்கோவிலுக்கு வருகின்ற நல்ல கட்டமைப்பையும் உருவாக்கி இருக்கின்றோம். இந்து சமய அறநிலையத்துறையில் தொடங்கப்படும் பணி வெற்றியடைகின்ற நிலையில் அதைத் தொடர்ச்சியாக அனைத்து திருக்கோயில்களுக்கும் கொண்டு செல்வதை வாடிக்கையாக இந்த ஆட்சியில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். மகா சிவராத்திரி விழாவை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் திருக்கோயில் முதலில் தொடங்கி, ஐந்து கோயில்களுக்கு விரிவுபடுத்தினோம். தற்போது ஆறு திருக்கோவில்களில் மகா சிவராத்திரி விழா நடைபெற இருக்கின்றது. ஒரு நல்ல நிகழ்வு ஒரு திருக்கோயிலில் தொடங்கப்பட்டு அது வெற்றிகரமாக பக்தர்களுக்கும் அந்த திருக்கோயிலுக்கும் நன்மை பயக்க வழி வகுக்கிறது என்றால் தொடர்ச்சியாக அந்த திட்டத்தை அனைத்து திருக்கோயிலுக்கும் கொண்டு செல்வோம். அந்த வகையில் சூரிய மின் சக்தி நிலையம் அமைக்கும் திட்டத்தினையும் நடைமுறைப்படுத்துவோம்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் அதிகமான பக்தர்கள் அனைத்து திருக்கோயில்களுக்கும், விழாக் காலங்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் கூடுகின்ற ஒரு நல்ல சூழல் ஏற்பட்டு, இந்த ஆட்சியில் இந்த ஆண்டு மிகப் புரட்சி நடந்து கொண்டிருக்கின்றது. 60 வயதைக் கடந்தவர்களுக்கு தனியாக க்யூ அமைக்கப்பட்டு இருக்கின்றது. பழனி திருக்கோயிலுக்கு ரோப் கார் மற்றும் வின்ச்சில் செல்வதற்கு அதிகமான அளவிற்கு மக்கள் வருகிறார்கள் அதைத் திட்டமிட்டு தான் கூடுதலாக ஒரு வின்ச்சை ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறோம். திருக்கோயிலுக்கு வரும் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தர அந்தந்த இணை ஆணையர்களுக்கு அவ்வப்போது அறிவுறுத்தி வருவதோடு, மாதந்தோறும் நடைபெறும் சீராய்வுக் கூட்டத்திலும் உரிய ஏற்பாடுகளை செய்திட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

பெருமளவு பக்தர்களை வரவேற்பை பெற்றிருக்கின்ற அஞ்சல் வழி பிரசாதம் அனுப்பும் திட்டமானது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிந்தையில் உதித்த ஒரு அற்புதமான திட்டம். பிரசாதத்திற்கு உண்டான கட்டணம் மற்றும் அஞ்சல் செலவு மட்டுமே வசூலிக்கப்படுகிறது. நேற்றைய தினம் மட்டும் 65 பேர்கள் பிரசாதம் அனுப்பிடக்கோரி விண்ணப்பித்துள்ளார்கள். விரைவில் இதன் எண்ணிக்கை அதிகரிக்கும். இதனைக் கண்காணிக்க ஒரு கூடுதல் ஆணையரை நியமித்திருக்கின்றோம்.

திருக்கோயில்களில் கட்டண தரிசன வரிசை நீளம் வேண்டுமானால் குறைவாக இருக்கலாம், பொது வரிசையில் வருபவர்களுடைய வரிசை நீளம் அதிகமாக இருக்கலாம், ஆனால் இருவரும் ஒரே சமய இடைவெளியில்தான் சாமி தரிசனம் செய்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜெ.கருணாநிதி, இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் க.வீ.முரளீதரன், திருக்கோயில் தக்கார் எல்.ஆதிமூலம், சிட்டி யூனியன் வங்கியின் மேலாண்மை இயக்குனர் காமகோடி, மாநகராட்சி மண்டலக்குழு தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, இணை ஆணையர் அர.சுதர்சன், திருக்கோயில் துணை ஆணையர்/செயல் அலுவலர் திருமதி ஜ.முல்லை மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (21.05.2023) வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின் சக்தி நிலையத்தை (Solar Power Piant) தொடங்கி வைத்தார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜெ. கருணாநிதி, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் கவிமுரளீதரன், திருக்கோயில் தக்கார் எல் ஆதிமூலம், சிட்டி யூனியன் வங்கியின் மேலாண்மை இயக்குனர் காமகோடி, மாநகராட்சி மண்டலக்குழு தலைவர் எம் கிருஷ்ணமூர்த்தி, இணை ஆணையர் அர.சுதர்சன். திருக்கோயில் துணை ஆணையர் செயல் அலுவலர் திருமதி ஜ.முல்லை மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

2000 ரூபாய் நோட்டுக்களை மாற்ற

எந்த ஆவணமும் தேவை இல்லை!

எஸ்.பி.ஐ. வங்கி அறிவிப்பு!

சென்னை,மே 23 - தற்போது 2000 ரூபாய் நோட்டுகளை கையில் வைத்திருப்பவர்கள் வரும் செப்டம்பர் 30ம் தேதிக்குள் வங்கிகளில் மாற்றிக்கொள்ளலாம் என ஆர்.பி.ஐ. அறிவித்துள்ளது. மேலும் நாள் ஒன்று ஒரு நபர் ரூ 20000 வரை மட்டுமே மாற்ற முடியும் என்று கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் 2000 ரூபாய் நோட்டுக்களை மாற்ற எந்த ஆவணமும் தேவையில்லை என்று எஸ்.பி.ஐ. தெரிவித்துள்ளது.

கறுப்புப் பணம், கள்ளப் பணத்தை ஒழிப்பதற்காக மோடி அரசு 'பணமதிப்பிழப்பு நடவடிக்கை' என்ற பெயரில் 2016 நவம்பர் 8ம் தேதி இரவு, திடீரென தொலைக்காட்சியில் பேசிய பிரதமர் மோடி பழைய 500, 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று அறிவித்தார். இந்த பணமதிப்பு நீக்க நடவடிக்கையின் மூலம், நாடு முழுவதும் புழக்கத்தில் இருந்த மொத்த பணத்தில் 86 சதவீதம் திரும்பப் பெறப்பட்டது. இதற்குப் பதிலாக புதிய 500, 2000 ரூபாய் நோட்டுகள் விநியோகிக்கப்பட்டன.

இந்நிலையில் தற்போது புழக்கத்தில் உள்ள 2000 ரூபாய் நோட்டுகளை திரும்ப பெறுவதாக இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இந்நிலையில் வரும் அக்டோபர் 30 ம் தேதி முதல் ரூபாய் 2000 செல்லாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது 2000 ரூபாய் நோட்டுகளை கையில் வைத்திருப்பவர்கள் வரும் செப்டம்பர் 30ம் தேதிக்குள் வங்கிகளில் மாற்றிக்கொள்ளலாம் என எஸ்.பி.ஐ. அறிவித்துள்ளது. மேலும் நாள் ஒன்று ஒரு நபர் ரூ 20000 வரை மட்டுமே மாற்ற முடியும் என்று கூறப்பட்டுள்ளது. அப்படி இருந்தும் நேற்று எஸ்.பி.ஐ. வங்கி வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளது.